# மத்திய பட்ஜெட் *2025-26:* முக்கிய அம்சங்கள்

***Posted On: 01 FEB 2025 1:29PM by PIB Chennai***

**பகுதி ஏ**

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன்*, 2025-26*-ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்தார்*.*

**பட்ஜெட் மதிப்பீடுகள் *2025-26***

- மொத்த வருவாய் கடன்களைத் தவிர மற்றும் மொத்த செலவினங்களின் மதிப்பீடுகள் முறையே ***34.96*** லட்சம் கோடி ***& 50.65*** லட்சம் கோடி ரூபாயாகும்*.*
- நிகர வரிவருவாய் மதிப்பீடு ***28.37*** லட்சம் கோடி ரூபாய்
- நிதிப்பற்றாக்குறை மதிப்பீடு உள்நாட்டு மொத்த உற்பத்தியில் ***4.4*** சதவீதம்
- சந்தைக் கடன்களுக்கான மொத்த மதிப்பீடு ***14.82*** லட்சம் கோடி ரூபாய்*.*
- ***2025-26***-ம் நிதியாண்டுக்கான மூலதனச் செலவினங்கள் ***11.21*** லட்சம் கோடி ரூபாய் ***(***உள்நாட்டு மொத்த உற்பத்தியில் ***3.1*** சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது*.*

**<u>வேளாண்மை – வளர்ச்சிக்கான முதலாவது ஊக்கி</u>**

**பிரதமரின் வளம் மற்றும் உணவு தானிய வேளாண் திட்டம்*)* – வேளாண் மாவட்ட மேம்பாடு*.***

- வேளாண் துறையில் திறன் மேம்பாடு*,* முதலீடு*,* தொழில்நுட்பம்*,* கிராமப்புற பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் மாநிலங்களுடன் இணைந்து பல்துறை விரிவான வேளாண் திட்டம் தொடங்கப்படும்*.*
- முதல் கட்டமாக ***100*** மாவட்டங்களில் வேளாண் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்படும்*.*

**பருப்பு உற்பத்தியில் தன்னிறைவு**

- துவரம்பருப்பு*,* உளுத்தம் பருப்பு மற்றும் மசூர் பருப்பு ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பருப்பு உற்பத்திக்கான தன்னிறைவு இயக்கத்தை மத்திய அரசு ***6*** ஆண்டுகளுக்கு செயல்படுத்த உள்ளது*.*
- தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைக்கான கூட்டமைப்பு மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு மூலம் இந்த பருப்பு வகைகள் கொள்முதல் விவசாயிகளிடமிருந்து அடுத்த ***4*** ஆண்டுகளுக்கு கொள்முதல் செய்யப்படும்*.*

**காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான விரிவான திட்டம்**

- காய்கறிகள் மற்றும் பழவகைகள் உற்பத்தி, சீரான விநியோகம், பதப்படுத்துதல், விவசாயிகளுக்கு வருவாயை அதிகரிக்கும் வகையில் விலை கிடைக்கச் செய்தல் போன்ற அம்சங்களை கருத்தில் கொண்டு மாநிலங்களுடன் இணைந்து விரிவான திட்டம் செயல்படுத்தப்படும்.

**பீகாரில் தாமரைப் பொரி உற்பத்தி வாரியம்**

- தாமரைப் பொரியின் உற்பத்தி, பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் தாமரைப் பொரி உற்பத்தி வாரியம் அமைக்கப்படும்.

**அதிக மகசூல் தரும் விதைகளுக்கான தேசிய இயக்கம்**

- அதிக விளைச்சல் தரக்கூடிய விதைகள் மேம்பாடு, வர்த்தக ரீதியில் ***100-***க்கும் அதிகமான வகைகளில் விதைகள் கிடைக்கச் செய்வது, சுற்றுச்சூழல் ஆராய்ச்சிகளை வலுப்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அதிக மகசூல் தரும் விதைகளுக்கான தேசிய இயக்கம் தொடங்கப்படும்.

**மீன்வளம்**

- ஆழ்கடல் மற்றும் பிரத்யேக இந்தியப் பொருளாதார மண்டலங்களில் மீன்பிடிப்புத் தொழிலை நிலைப்படுத்தும் வகையிலான கட்டமைப்பை மத்திய அரசு கொண்டுவர உள்ளது. இதில் அந்தமான் நிக்கோபார் மற்றும் லட்சத்தீவுகளில் உள்ள கடல்பகுதிகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

**பருத்தி உற்பத்திக்கான இயக்கம்**

- பருத்தி விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், நீண்டகால பருத்தி வகைகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையிலும் அதன் உற்பத்தியை குறிப்பிடத்தக்க மேம்படுத்துவதற்கான ***5*** ஆண்டுகால இயக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண் அடையாள அட்டைகள் மூலம் கடனுதவி விரிவாக்கம்**

- வேளாண் கடன் அட்டைகள் மூலம் பெறப்படும் கடன் தொகை ***3*** லட்சம் ரூபாயிலிருந்து ***5*** லட்சம் ரூபாயாக உயர்த்தும் வகையில் திருத்தியமைக்கப்பட்ட வட்டி மானிய விகிதத்தின் கீழ், கடன்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிக்கப்படும்.

**அசாமில் யூரியா உற்பத்தித் தொழிற்சாலை**

- அசாம் மாநிலம் நம்ருப்பில் ஆண்டு ஒன்றுக்கு ***12.7*** லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட உர ஆலை நிறுவப்படும்.

**<u>குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்களின் மேம்பாட்டிற்கான *2-*வது கட்ட ஊக்கிகள்</u>**

குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் வகைப்பாடுகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரையறைகள்

- அனைத்து குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் வகைப்படுத்தலுக்கான முதலீடு மற்றும் விற்பனை உச்சவரம்பு, முறையே இரண்டரை மற்றும் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### குறு நிறுவனங்களுக்கான கடன் அட்டைகள்

- உதயம் இணையதளம் வாயிலாக பதிவு செய்துள்ள குறு தொழில் நிறுவனங்களுக்கான பிரத்யேக கடன் அட்டைகளின் உச்ச வரம்ப ஐந்து லட்சம் ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி முதல் ஆண்டில், பத்து லட்சம் கடன் அட்டைகள் வெளியிடப்படும்.

### புத்தொழில் நிறுவனங்களின் நிதியுதவிக்கான நிதியம்

- புதிய நிதியுதவிக்கான நிதியத்தை உருவாக்கும் வகையில் ***10,000*** கோடி ரூபாய் பங்களிப்புடன் இந்த நிதியம் உருவாக்கப்படும்.

### முதல் முறை தொழில் முனைவோருக்கான திட்டங்கள்

- அடுத்த *5* ஆண்டுகளுக்கு, *5* லட்சம் பெண்கள், ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த முதல் முறை தொழில் முனைவோருக்கு *2* கோடி ரூபாய் வரை நீண்டகால கடனுதவி வழங்கும் புதிய திட்டம் அறிவிப்பு.

### காலணிகள் மற்றும் தோல் துறை உற்பத்திக்கான திட்டங்கள்

- நாட்டின் காலணிகள் மற்றும் தோல் துறையின் உற்பத்தி, தரம் மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்தும் வகையிலும் *22* லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும் *4* லட்சம் கோடி ரூபாய் விற்பனை வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும், *1.1* லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதல் மதிப்பிலான ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

### பொம்மை உற்பத்தித் துறைக்கான அளவீடுகள்

- பொம்மை உற்பத்தியில் இந்தியாவை உலகின் மையமாக உருவெடுக்கச் செய்யும் வகையில், உயர் தரத்திலான தனித்துவம் மிக்க நீடித்த தன்மையுடன் கூடிய புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

### உணவுப் பதப்படுத்துதல் தொழிலுக்கான ஆதரவு

- பீகாரில் உணவு தொழில்நுட்ப, தொழில்முனைவு மற்றும் மேலாண்மைக்கான தேசிய நிறுவனம் ஏற்படுத்தப்படும்.

### உற்பத்திக்கான இந்தியா திட்டத்தை மேம்படுத்துவதற்கான உற்பத்தி இயக்கம்

- உற்பத்திக்கான இந்தியா திட்டத்தை மேம்படுத்தும் வகையில், சிறு, நடுத்தர, பெரிய தொழில் நிறுவனங்களை உள்ளடக்கிய தேசிய உற்பத்தி இயக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

### முதலீடுகள் – மேம்பாட்டிற்கான *3*-வது ஊக்கி

1. **மக்கள் முதலீடு**

**அங்கன்வாடி மற்றும் ஊட்டச்சத்து மேம்பாடஇயக்கம் *2.0***

- ஊட்டச்சத்து உணவு ஆதரவு நடவடிக்கைகளுக்கான செலவுகள் குறித்த விதிமுறைகள்.

**அடல் சிந்தனை ஆய்வகம்**

- அடுத்த ***5*** ஆண்டுகளில் அரசு பள்ளிகளில் ***50,000*** அடல் சிந்தனை ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும்.

**அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களில் அகண்ட அலைவரிசைக்கான இணைப்பை உருவாக்குதல்**

- பாரத் நெட் திட்டத்தின் கீழ், கிராமப்புறப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அனைத்து அரசு மேல் நிலைப் பள்ளிகளில் அகண்ட அலைவரிசைக்கான இணைப்புகள் ஏற்படுத்தப்படும்.

**இந்திய மொழிப் புத்தகத் திட்டம்**

- பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான டிஜிட்டல் வடிவிலான இந்திய மொழிகளில் புத்தகங்கள் வழங்கும் வகையில் இந்திய மொழிப் புத்தகத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**திறன் மேம்பாட்டிற்கான சீர்மிகு தேசிய மையம்**

- இந்தியாவில் உற்பத்தி செய்வோம் திட்டத்திற்குத் தேவையான இளைஞர்களின் திறன் மேம்பாட்டை மேம்படுத்தும் வகையில் சர்வதேச நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ***5*** திறன் மேம்பாட்டிற்கான சீர்மிகு தேசிய மையங்கள் ஏற்படுத்தப்படும்.

**இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் விரிவாக்கம் செய்யப்படும்.**

- ***2014-***ம் ஆண்டுக்குப் பிறகு தொடங்கப்பட்ட ***5*** இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் ***6,500-***க்கும் அதிகமான மாணவர் சேர்க்கைக்கான இடங்களை அதிகரிக்கும் வகையில், கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

**கல்விக்கான செயற்கை தொழில்நுட்பத்துடன் கூடிய சீர்மிகு மையங்கள்**

- கல்விக்கான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ***500*** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் சீர்மிகு மையங்கள் அமைக்கப்படும்.

**மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் விரிவுபடுத்தப்படும்**

- அடுத்த ***5*** ஆண்டுகளில் ***75,000*** இடங்களை சேர்க்கும் வகையில், அடுத்த ஆண்டு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் கூடுதல் ***10,000*** இடங்கள் உருவாக்கப்படும்.

**அனைத்து மாவட்ட மருத்துவமனைகளில் பகல்நேர புற்றுநோய் பராமரிப்பு மையங்கள்**

- அடுத்த ***3*** ஆண்டுகளில் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளில் பகல் நேர புற்றுநோய் பராமரிப்பு மையங்களை உருவாக்கும் வகையில்***, 2025-26-***ம் நிதியாண்டில் ***200*** மையங்களை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது***.***

**நகர்ப்புற வாழ்வியல் முறைகளை வலுப்படுத்துதல்**

- நகர்ப்புற தொழிலாளர்களின் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவிடும் வகையில்***,*** அவர்களது வருவாய் மற்றும் நீடித்த வாழ்வாதாரத்திற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது***.***

**பிரதமரின் சாலையோர வியாபாரிகளுக்கான கடனுதவித் திட்டம்**

- இத்திட்டம் வங்கிகளிடமிருந்து கடனுதவி பெறுவதுடன் ஒருங்கிணைந்த கட்டண நடைமுறை அமைப்புடன் இணைக்கப்பட்ட ***30,000*** ரூபாய் உச்சவரம்புடன் கூடிய கடன் அட்டைகளை வழங்கும் வகையில் விரிவாக்கம் செய்யப்படும்***.***

**இணையதளம் வாயிலாக பணி புரியும் தொழிலாளர்கள் நலன்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்**

- அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு இ-ஷ்ரம் இணையதளம் வாயிலாக பதிவு செய்வதற்கும் அடையாள அட்டைகள் வழங்கவும்***.*** பிரதமரின் மக்கள் சுகாதாரத் திட்டத்தின் கீழ் சுகாதார சேவைகள் வழங்க மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது***.***

***2.*** **பொருளாதார முதலீடுகள்**

**உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பொதுத்துறை தனியார் கூட்டமைப்பு**

- பொதுத்துறை - தனியார் துறை கூட்டமைப்பில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான அமைச்சகங்களின் ***3*** ஆண்டுகால செயல் திட்டங்களை வகுக்க மாநில அரசுகள் ஊக்குவிக்கப்படும்***.***

**உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் மாநிலங்களுக்கு ஆதரவு**

- மூலதன செலவின ங்கள் மற்றும் மறுசீரமைப்பிற்கான ஊக்கத்தொகை வழங்கும் வகையில் மாநிலங்களுக்கு ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் வட்டியில்லா ***50*** ஆண்டுகால கடனுதவி வழங்கப்படும்***.***

**சொத்துப் பணமாக்கல் திட்டம் *2025-30***

- புதிய திட்டங்களில் ***10*** லட்சம் கோடி ரூபாய் அளவிலான முதலீடுகளை திரும்பப் பெறும் வகையில்***, 2025*** முதல் ***2030-***ம் ஆண்டு வரை ***2-***வது திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படும்***.***

**ஜல்ஜீவன் இயக்கம்**

- கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன் ***2028-***ம் ஆண்டு வரை இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பபட்டுள்ளது***.***

**நகர்ப்புற சவால்களுக்கான நிதியம்**

- நகர்ப்புறங்களை வளர்ச்சிக்கான மையங்களாக உருவாக்கும் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஏதுவாக ஒருகோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் நகர்ப்புற சவால்கள் நிதியம் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புறங்களில் மறு மேம்பாட்டு உருவாக்கம், குடிநீர் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் வகையில் ***2025-26-***ம் நிதியாண்டில் ***10,000*** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அணு எரிசக்தி இயக்கம்**

- அணு எரிசக்திச் சட்டம் மற்றும் அணு உலைகளால் ஏற்படும் சேதங்களுக்கான உரிமைத் தொகைப் பொறுப்புகள் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.
- ***20,000*** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் சிறிய அளவிலான அணு உலைகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான அணு எரிசக்தி இயக்கம் ஏற்படுத்தப்படும். ***2030-***ம் ஆண்டில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ***5*** சிறிய அளவிலான அணு உலைகள் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

**கப்பல் கட்டுமானம்**

- கப்பல் கட்டுமானத்திற்கான நிதியுதவிக் கொள்கைகள் மாற்றியமைக்கப்படும்.
- சீரமைக்கப்பட்ட உள்கட்டமைப்புத் திட்டப் பட்டியலை உள்ளடக்கிய பிரத்யேக வடிவிரலான பெரிய கப்பல்கட்டுமானங்களை மேற்கொள்வது.

**கடல்சார் மேம்பாட்டு நிதியம்**

- ***25,000*** கோடி ரூபாய் மூலதன நிதியுடன் கடல்சார் மேம்பாட்டு நிதியம் அமைக்கப்படும். இதில் ***49*** சதவீதம் மத்திய அரசின் பங்களிப்பாகவும், எஞ்சிய ***51*** சதவீதம் துறைமுகங்கள் மற்றும் தனியார் பங்களிப்பாகவும் இருக்கும்

**உடான் – மண்டல இணைப்புத் திட்டம்**

- திருத்தியமைக்கப்பட்ட உடான் திட்டத்தின் கீழ், அடுத்த ***10*** ஆண்டுகளில் ***4*** கோடி விமானப் பயணிகளைக் கையாளும் திறன் கொண்ட ***120*** புதிய விமான நிலையங்களுக்கான மண்டல இணைப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளது.
- மலைப்பாங்கான பகுதிகள் முன்னேற விரும்பும் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மாவட்டங்களில் சிறிய அளவிலான விமான நிலையங்கள் மற்றும் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைக்க ஆதரவு.

**பீகாரில் பசுமை விமான நிலையம்**

- பீகார் பசுமை விமான நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக பாட்னா விமான நிலைய விரிவாக்கம் மற்றும் பிஹ்டாவில் விமான நிலையம் மேம்பாடு ஆகியவை மேற்கொள்ளப்படும்.

**மிதிலாஞ்சலில் மேற்கு கொசி கால்வாய் திட்டம்**

- பீகாரில் நிறுவன இடம் மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கு கொசி கால்வாய் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

**சுரங்கத்துறை மறு சீரமைப்பு நடவடிக்கைகள்**

- குறைந்து வரும் முக்கியத்துவம் வாய்ந்த கனிம வளங்களைப் பாதுகாக்கும் வகையில் அதனை மீட்டெடுப்பதற்கான கொள்கைகள் வகுக்கப்படும்.

### குறைந்த மற்றும் நடுத்தர வகுப்பினருக்கு வீட்டு வசதிக்கான சிறப்பு சாளர நிதியம் *2*

- அரசு, வங்கிகள், தனியார்துறை பங்களிப்புடன் மேலும் ஒரு லட்சம் குடியிருப்பு வீடுகளை விரைந்து கட்டி முடிக்கும் நோக்கில் ***15,000*** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத்துறை வளர்ச்சி

- மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் நாடு முழுவதிலும் உள்ள ***50*** முக்கிய சுற்றுலா தலங்கள் சவால் அடிப்படையில் மேம்படுத்தப்படும்.

## *3.* <u>புதிய கண்டுபிடிப்புகளுக்கான முதலீடு</u>

### ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள்

- கடந்த ஜூலை மாதம் இடைக்கால பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள். தனியார் துறையின் பங்களிப்புடன் கூடிய திட்டத்தை அமல்படுத்துவதற்கான ***20,000*** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அறிவியல் அடிப்படையிலான நவீன தொழில்நுட்பத்திற்கான நிதி ஒதுக்கீடுகள்

- அடுத்த தலைமுறை புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்திற்கான நிதி ஒதுக்கீடுகள்

### பிரதமரின் ஆராய்ச்சி படிப்புகளுக்கான நிதி ஒதுக்கீடு

- இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள், இந்திய அறிவியல் நிறுவனங்களின் தொழில்நுட்பம் சார்ந்த ***10,000*** ஆராய்ச்சி மேற்படிப்புகளுக்கான நிதியுதவி மேம்பாட்டுத் திட்டம்.

### மரபணு மாற்ற பயிர்களுக்கான மரபணு வங்கிகள்

- எதிர்காலத்திற்குத் தேவையான உணவு, தானியங்கள் மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ***10*** லட்சம் மரபணு அடிப்படையிலான ***2-*** வது மரபணு வங்கி அமைக்கப்படும்.

### தேசிய புவிசார் இயக்கம்

- அடிப்படை புவிசார் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தரவுகளை மேம்படுத்தும் வகையில் தேசிய புவிசார் இயக்கம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### அறிவுசார் இந்தியா இயக்கம்

- பாரம்பரிய கையெழுத்துப் பிரதிகள் குறித்த ஆய்வுகள் ஆவணப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் நடவடிக்கைகளுக்கான கல்வி நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், நூலகங்கள், தனிநபர் சேகரிப்பாளர்கள் ஆகியோரின் உதவியுடன் ஒரு கோடிக்கும்

அதிகமான கையெழுத்துப் பிரதிகள் அறிவுசார் இந்தியா இயக்கத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**4. ஏற்றுமதிகள் – வளர்ச்சிக்கான 4-வது ஊக்கி**

**ஏற்றுமதி ஊக்குவிப்பு இயக்கம்**

- துறை வாரியான மற்றும் அமைச்சகங்களின் இலக்குடன் வர்த்தகம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன அமைச்சகம் மற்றும் நிதி அமைச்சகம் ஆகியவை இணைந்து ஏற்றுமதி ஊக்குவிப்பு இயக்கம் செயல்படுத்தப்படும்.

**பாரத் வர்த்தக வலை அமைப்பு**

- சர்வதேச வர்த்தகத்திற்கான ஆவணங்கள் மற்றும் நிதி சார்ந்த நடவடிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஒருங்கிணைந்த தளமாக பாரத் வர்த்தக வலை அமைப்பு உருவாக்கப்படும்

**சர்வதேச திறன் மையங்களுக்கான தேசிய கட்டமைப்பு**

- வளர்ந்து வரும் *2*-ம் நிலை நகரங்களில், சர்வதேச திறன் மையங்களை ஊக்குவிக்கும் வகையில் மாநிலங்களுக்கான தேசிய கட்டமைப்பு வழிகாட்டுதல் நெறிமுறைகள் வகுக்கப்படும்.

**5. <u>சீர்திருத்த நடவடிக்கைகள் : நிதித்துறை சீர்திருத்தங்கள் மேம்பாடு</u>**

**காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீடு**

- காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டுக்கான உச்சவரம்பு *74* சதவீதத்திலிருந்து *100* சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் காப்பீட்டு நிறுவனங்கள் *100* சதவீதம் முதலீட்டை இந்தியாவில் மேற்கொள்ள முடியும்.

**நிதிசார், உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய வங்கியால் வழங்கப்படும் கடன் வசதிகள் மேம்படுத்தப்படும்**

- உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ஏதுவாக நிறுவனங்களின் கடன் பத்திரங்கள் மீதான பகுதி அளவு கடன் வசதி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு நிதிசார் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

**கிராமப்புற கடன் மதிப்பீடு**

- கிராமப்புறப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு கடனுதவிகள் வழங்கும் வகையில் பொதுத்துறை வங்கிகள் கிராமப்புற கடன் மேம்பாடு தொடர்பான கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.

**ஓய்வூதியத்துறை**

- ஓய்வூதியம் சார்ந்த செயல்பாடுகளில் ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு ஒழுங்குமுறை அமைப்பு உருவாக்கப்படும்.

**மறு சீரமைப்பு ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கான உயர்நிலைக் குழு**

- அனைத்துவிதமான நிதித்துறை சாராத கட்டுப்பாடுகள் சான்றிழ்கள் உரிமங்கள் மற்றும் அனுமதிகள் வழங்குவதை ஆய்வு செய்யும் வகையில் மறுசீரமைப்பு ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கான உயர்நிலைக்குழு அமைக்கப்படும்*.*

**மாநிலங்களின் முதலீடுகளுக்கான குறியீடுகள்**

- ***2025-***ம் ஆண்டில் கூட்டுறவு கூட்டாட்சியின் போட்டித்தன்மையை அதிகரிக்கும் வகையில்*,* முதலீடுகளுக்கு உகந்த மாநிலங்களுக்கான குறியீடுகள் வழங்கும் நடவடிக்கைகள் தொடங்கப்படும்*.*

**மக்கள் நம்பிக்கை மசோதா *2.0***

- பல்வேறு சட்டங்களில் குற்றமாகக் கருதப்படும் ***100-***க்கும் அதிகமான பிரிவுகளை திருத்தியமைக்கும் மக்கள் நம்பிக்கை மசோதா ***2.0*** கொண்டுவரப்படும்*.*

***------***

**பகுதி பி**

**நேரடி வரிகள்**

- தனிநபர் வருமான உச்சவரம்பு ***12*** லட்சம் ரூபாயாக அதிகரிப்பு*.* இதன்படி தனிநபர் வருமானம் ***12*** லட்சம் ரூபாய் வரை வருமான வரி இல்லை*.* ***(***மொத்த வருமானம் கணக்கிடுவதில் சிறப்பு வரி விகிதத்துடன் கூடிய மூலதன லாபம் தவிர மாதம் ஒன்றுக்கு சராசரியாக ஒரு லட்சம் ரூபாய் வருமானம்***)***
- வரி செலுத்தும் சம்பளதாரர்களுக்கு இந்த உச்ச வரம்ப ***12.75*** லட்சம் வரை இருக்கும்*.* இதில் நிலைக் கழிவாக ரூபாய் ***75,000*** கணக்கில் கொள்ளப்படும்*.*
- நடுத்தர பிரிவினருக்கு வரி விகிதங்களைக் குறைக்கும் வகையில் புதிய வரி விகித கட்டமைப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன*.* இதன் காரணமாக நடுத்தரப் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு வீட்டு நுகர்வுக்கான பொருட்களை வாங்குவது*,* சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கு செலவு செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும்*.*
- புதிய வருமான வரி சட்ட மசோதா வரி செலுத்துவோர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் வரி நிர்வாகத்தை திறம்பட மேற்கொள்ளும் வகையிலும்*,* வரி தொடர்பான சர்ச்சைகளைக் குறைத்து வரி விகிதங்களை உறுதிப்படுத்தும் வகையிலும் தெளிவான பிரிவுகளுடன் வெளிப்படைத்தன்மையுடன் தாக்கல் செய்யப்படும்*.*
- நேரடி வரிகள் மூலம் ஒரு லட்சம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும்*.*

**திருத்தியமைக்கப்பட்ட வரி விகித கட்டமைப்புகள்**

புதிய வரி முறைகளின் கீழ்*,* மாற்றியமைக்கப்பட்ட வரிவிகித கட்டமைப்பு பின்வருமாறு*:*

தனிநபர் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு*,* ***12*** லட்சம் ரூபாய் வரை வரி விதிப்பு எதுவும் இல்லை*.* ***12*** லட்சம் ரூபாய்க்கும் கூடுதலான தனிநபர் வருமானத்திற்கு ***(***நிலைக்கழிவு ***75,000*** ரூபாய் கழித்த பிறகு***)*** உள்ள வரிவிகிதங்கள் முறையே*:*

***4*** லட்சம் ரூபாய் வரை ***- 0%***

***4*** லட்சம் ரூபாய் முதல் ***8*** லட்சம் ரூபாய் வரை - ***5%***

***8*** முதல் ***12*** லட்சம் ரூபாய் வரை - ***10%***

***12*** முதல் ***16*** லட்சம் ரூபாய் வரை - ***15%***

***16*** முதல் ***20*** லட்சம் ரூபாய் வரை - ***20%***

***20*** முதல் ***24*** லட்சம் ரூபாய் வரை - ***25 %***

***24*** லட்சம் ரூபாய்க்கும் மேல் - ***30 %***

------

**வரிபிடித்த நடைமுறைகளில் உள்ள சிரமங்களை எளிதாக்கும் வகையில் ஆதார வரிபிடித்தம் (டிடிஎஸ்) / ஆதார வரி வசூல் (டிசிஎஸ்) முறைகளில் சீரமைப்பு நடவடிக்கைகள்**

- வரிபிடித்தம் செய்யக் கூடிய வருவாய் இனங்களுக்கான உச்சவரம்பு தொகை மற்றும் வரி விகிதங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையிலான சீரமைப்பு நடவடிக்கைகள்.
- மூத்த குடிமக்களுக்கான வைப்புத் தொகைக்கு வழங்கப்படும் வட்டித் தொகைக்கான டிடிஎஸ் பிடித்த உச்சவரம்புத் தொகை ***50,000*** ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- வாடகை வருவாய் மீதான டிடிஎஸ் பிடித்த உச்சவரம்புத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ***2.4*** லட்சம் ரூபாயிலிருந்து ***6*** லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் சுதந்திரமான பரிவர்த்தனை திட்டத்தின் கீழ் பணபரிவர்த்தனைக்கான ஆதார வரிபிடித்த உச்சவரம்பு ***7*** லட்சம் ரூபாயிலிருந்து ***10*** லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- நிரந்தர கணக்கு எண் (பான்) இல்லாதவர்களுக்கு உயர் அளவான ஆதார வரி பிடித்தம் செய்யப்படும்.
- ஆதார வரி வசூல் தொகையை தாமதமாக செலுத்துபவர்களுக்கு அது தொடர்பான அறிக்கை தாக்கல் செய்வதற்கான காலகெடு வரை குற்றமாகக் கருதப்பட மாட்டாது.

**இணக்க நடைமுறைகளின் சுமைகளைக் குறைத்தல்**

- சிறிய அறக்கட்டளைகள் / நிறுவனங்களுக்கான இணக்க நடைமுறைகளின் சுமையைக் குறைக்கும் வகையில், அறிக்கை தாக்கல் செய்வதில் அதன் பதிவு செய்த காலமான ***5*** ஆண்டுகளிலிருந்து ***10*** ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.
- சொந்த வீட்டின் மீதான ஆண்டு மதிப்பு பூஜ்யமாக அறிவிப்பதன் மூலம் கிடைக்கும் பயன்கள் எவ்வித நிபந்தனையின்றி இரண்டு வீடுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**வர்த்தகம் புரிதலை எளிதாக்குதல்**

- சர்வதேச பரிவர்த்தனைகளில் விலை வரையறை குறித்து ***3*** ஆண்டு காலத்திற்குள் கண்டறிவதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- சர்வதேச வரி விதிப்பில் உறுதித் தன்மையை வழங்கும் வகையிலும் வழக்குகளைக் குறைக்கும் வகையிலும், பாதுகாப்பான துறைமுக விதிகள்

உருவாக்கம் செய்யப்படும்.

- **2024**-ம் ஆண்டு ஆகஸ்ட் **29**-ம் தேதிக்குப் பிறகு தனிநபரால் தேசிய சேமிப்புத் திட்டத்தின் கீழ் திரும்பப் பெறப்படும் தொகைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்த உச்சவரம்பின் அடிப்படையில் தேசிய ஓய்வூதியத்திட்டக் கணக்குகளின் மூத்த குடிமக்களுக்கான கணக்குகளுக்கும் ஒரே மாதிரியான நடைமுறைகள் பின்பற்றப்படும்.

**வேலைவாய்ப்பு மற்றும் முதலீடு**

**மின்னணு சாதன உற்பத்தித் திட்டங்களுக்கான வரி விதிப்புகள்**

- இந்தியாவில் உள்ள மின்னணு சாதன உற்பத்தி நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கும் குடியுரிமை இல்லாத நிறுவனங்களுக்கு முன்கூட்டிக் கணிக்கப்பட்ட வரிவிதிப்பு நடைமுறைகள் பொருந்தும்.
- பிரத்யேக மின்னணு சாதன உற்பத்தி அலகுகளுக்கு விநியோகிக்கப்படும் உதிரிப் பாகங்களை கிடங்குகளில் சேமித்து வைக்கும் கிடங்குகளில் வெளிநாட்டவர்களுக்கான வரி விதிப்பை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பான துறைமுகத் திட்டம் அறிமுகம் செய்யப்டும்.

**உள்நாட்டு கப்பல் போக்குவரத்துக்கான எடை அடிப்படையிலான வரி விதிப்புத் திட்டம்**

- ஏற்கனவே நடைமுறையில் உள்ள உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்துக்கான எடை அடிப்படையிலான வரி விதிப்புத் திட்டம் இந்திய கப்பல் சட்டம் **2021**-ன் படி பதிவு செய்யப்பட்டள்ள உள்நாட்டுக் கப்பல்களுக்கும் நீட்டிக்கப்படும். இது நாட்டின் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தை ஊக்குவிக்கும்.

**புத்தொழில் நிறுவனங்களுக்கான பதிவு காலங்கள் நீட்டிக்கப்படும்.**

- **01.04.2030**-ம் தேதிக்கு முன்னர் பதிவு செய்யப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு அதன் பதிவுக் காலம் **5** ஆண்டுகள் வரை நீட்டிக்க அனுமதிக்கப்படும்.

**மாற்றுமுறை முதலீட்டு நிதி**

- உள்கட்டமைப்பு மற்றும் அது சார்ந்த பிற துறைகளில் மேற்கொள்ளப்படும் வகைப்பாடு **1** மற்றும் வகைப்பாடு **2** ஆகியவற்றின் முதலீடுகளுக்கு மாற்றுமுறை முதலீட்டு நிதித் திட்டத்தின் கீழ், பங்கு பத்திரங்களிலிருந்து பெறப்படும் லாபத் தொகைக்கு வரி விதிப்பு உறுதி செய்யப்படும்.

**தங்கப்பத்திரங்கள் மற்றும் ஓய்வூதிய நிதிக்கான முதலீட்டுத் தேதிகள் நீட்டிப்பு**

- **5** ஆண்டுகளுக்கும் கூடுதலான தங்கப்பத்திர சொத்து நிதி மற்றும் ஓய்வூதிய நிதியில் முதலீடு செய்வதற்கான கால அவகாசம் **2030**-ஆண்டு மார்ச் **31**-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உள்கட்டமைப்புத் துறையில் முதலீடுகள் ஊக்குவிக்கப்படும்.

**மறைமுக வரிகள்**

**தொழிற்சாலை சரக்குகளுக்கான சுங்க வரிவிதிப்பு முறைகளில் மாற்றங்கள்**

***2025-26-***ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் முன்மொழியப்பட்ட அம்சங்கள்

1. ***7*** விதமான வரி விகிதங்கள் நீக்கப்பட்டுள்ளன*.* இது ***2023-24-***ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் நீக்கப்பட்ட ***7*** வரி விகிதங்கள் தவிர மேலும் ***7*** வரி விகிதங்கள் நீக்கப்பட்டன*.* இதனையடுத்து பூஜ்ய வரி விகிதம் உட்பட மொத்தம் ***8*** வகையான வரி விகிதங்களே எஞ்சியுள்ளன*.*
2. ஒரு சில பொருட்களைத் தவிர மற்ற பொருட்களுக்கான சுங்க வரித் தீர்வைகள் விதிக்கப்பட்டு வரும் நிலையில்*,* அது சார்ந்த சில பொருட்களுக்கான தீர்வைகளும் சிறிதளவு குறைக்கப்பட்டுள்ளன*.*
3. ஒன்றுக்கும் மேற்பட்ட சுங்கத் தீர்வு அல்லது கூடுதல் கட்டணம் விதிக்கக் கூடாது*.* இதன் மூலம் சமூக நலக் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும் இனங்களுக்கு சுங்கத்தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது*.*

**மறைமுக வரிகள் மூலம் கிடைக்கும் *2,600* கோடி ரூபாய் வருவாய் இழப்பு**

**மருந்துப் பொருட்களுக்கு இறக்குமதி வரியிலிருந்து நிவாரணம்**

- உயிர் காக்கும் ***36*** வகையான மருந்துப் பொருட்களுக்கு அடிப்படை சுங்கத் தீர்வையிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது*.*
- உயிர் காக்கும் ***6*** வகையான மருந்துகளுக்கான சுங்கத் தீர்வை ***5*** சதவீதமாகக் குறைக்கப்படும்*.* சில பிரத்யேக மருந்துப் பொருட்களுக்கு மருந்து உற்பத்தி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் நோயாளிகள் உதவித் திட்டத்தின் கீழ் அடிப்படை சுங்கத் தீர்வையிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்*.* ***37-***க்கும் அதிகமான மருந்துகளுடன் கூடுதலாக புதிய ***13*** வகையான நோயாளிகள் மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் இந்த வரி விலக்கு பொருந்தும்*.*

**உள்நாட்டு உற்பத்தி மற்றும் மதிப்புக் கூட்டலுக்கு ஆதரவு**

- **முக்கியத்துவம் வாய்ந்த கனிம வளங்கள்**
- பவுடர் வடிவிலான கோபால்ட் உலோகம் மற்றும் கழிவுகள் ***:*** பயன்பாடற்ற லித்தியம் அயன்*,* மின்கலன்கள்*,* ஈயம்*,* துத்தநாகம் மற்றும் ***12-***க்கும் கூடுதலான முக்கிய கனிம வளத்தாதுக்களின் இறக்குமதிக்கு அடிப்படை சுங்கத் தீர்வையிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது*.*

**ஜவுளித்துறை**

- தறிகளில் பயன்படுத்தப்படாத ***2*** வகையான ஜவுளி எந்திரங்களுக்கு முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது*.*
- பின்னல் ஆடைகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட அடிப்படை சுங்கத் தீர்வை விகிதம் ***10%*** அல்லது ***20%*** லிருந்து*,* ***20%*** அல்லது கிலோ ஒன்றுக்கு ***115*** ரூபாய் இதில் அதிகமான வரி விகிதம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்*.*

**மின்னணு சாதனங்கள்**

- தொடு திரை கொண்ட பெரிய அளவிலான காட்சித் திரைகளுக்கான அடிப்படை சுங்கத் தீர்வை ***10*** சதவீதத்திலிருந்து ***20*** சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது*.*

- பயன்படுத்துவதற்கு தயாராக உள்ள மின்னணு சாதனங்கள் மற்றும் பிற உதிரிப் பாக ங்களுக்கான அடிப்படை சுங்கத் தீர்வை ***5*** சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது***.***
- பயன்படுத்துவதற்கு தயாராக உள்ள மின்னணு சாதனங்களுக்கான உதிரிப் பாகங்களுக்கான அடிப்படை சுங்கத் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது***.***

**லித்தியம், அயன் மின்கலன்**

- மின்சார வாகனங்களுக்கான மின்கலன் உற்பத்திக்குத் தேவைப்படும் ***35*** வகையான கூடுதல் முதலீட்டு சரக்குகளுக்கும்***,*** மொபைல் சாதனங்களுக்கான மின்கலன் உற்பத்திக்குத் தேவைப்படும் ***28*** வகையான கூடுதல் முதலீட்டு சரக்குகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது***.***

**கப்பல் துறை**

- கப்பல் கட்டுமானத்திற்குத் தேவையான மூலப் பொருட்கள்***,*** உதிரிப் பாகங்கள்***,*** மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய பாகங்களுக்க அடிப்படை சுங்கத் தீர்வையிலிருந்து மேலும் ***10*** ஆண்டுகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது***.***
- கப்பல்களை உடைக்கும் தொழிலுக்கும் இந்த வரி விலக்கு தொடரும்

**தொலைத் தொடர்புத்துறை**

- தரவுகளுக்கான தரத்தில் உள்ள வலைதள சுவிட்சுகளுக்கு அடிப்படை சுங்கத்தீர்வை ***20*** சதவீதத்திலிருந்து ***10*** சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது***.***

**ஏற்றுமதி ஊக்குவிப்பு**

**கைவினைப் பொருட்கள்**

- கைவினைப் பொருட்களின் ஏற்றுமதிக்கான கால அவகாசம் ***6*** மாதத்திலிருந்து ஒரு ஆண்டாக நீட்டிக்கப்பட்டுள்ளது***.*** தேவைப்படும் பட்சத்தில் மேலும் ***3*** மாதங்களுக்கு கால அவகாசம் நீட்டிக்கப்படும்***.***
- சுங்கத்தீர்வை இல்லாத இடுபொருட்களுக்கான பட்டியலில் மேலும் ***9*** பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளன***.***

**தோல்துறை**

- ஈரப்பதத்துடன் கூடிய நீலநிற தோல்களுக்கான அடிப்படை சுங்கத் தீர்வையிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது***.***
- தோலால் செய்யப்படும் கைவினைப் பொருட்களுக்கு ஏற்றுமதி தீர்வையிலிருந்து ***20*** சதவீதம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது***.***

**கடல்சார் பொருட்கள்**

- உறைய வைக்கப்பட்ட அரைத்த மீன் உணவு உற்பத்தி மற்றும் அது சார்ந்த ஏற்றுமதிக்கான அடிப்படை சுங்கத்தீர்வை ***30*** சதவீதத்திலிருந்து ***5*** சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது***.***
- மீன் மூலக்கூறு உற்பத்தி மற்றும் இறால் உணவு ஆகியவற்றுக்கான அடிப்படை சுங்கத்தீர்வை ***15*** சதவீதத்திலிருந்து ***5*** சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது***.***

**ரயில்வே சரக்குகளுக்கான உள்நாட்டு பராமரிப்பு, பழுது நீக்கம் , செயல்பாடுகள்**

- ரயில்வே துறையில் பராமரிப்பு, பழுது பார்த்தல், செயலாக்கம், ஆகிய சேவைகள், பயனடையும் வகையில், அதே போன்று விமானங்கள் மற்றும் கப்பல்களுக்கான சேவைகளில் பழுது நீக்கத்திற்கான பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.
- இத்தகைய பொருட்களின் ஏற்றுமதிக்கான கால அவகாசம் *6* மாதத்திலிருந்து ஒரு ஆண்டாக நீட்டிக்கப்பட்டுள்ளது. இது மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிக்கப்படும்.

**வர்த்தக வசதிகள்**

**தற்காலிக மதிப்பீட்டிற்கான கால வரம்பு**

- தற்காலிக மதிப்பீடுகளை இறுதி செய்யும் வகையில் அதற்கான கால அவகாசம் *2* ஆண்டுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது மேலும் ஒரு ஆண்டுகாலத்திற்கு நீட்டிக்கப்படும்

**தன்னார்வ இணக்க நடைமுறைகள்**

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள் பயனடையும் வகையில் சுங்கச் சாவடிகளிலிருந்து சரக்குகளை பெறுவதற்கு அது தொடர்பான விவரங்களை தன்னிச்சையாக வெளியிடுவதற்கும் சுங்கவரியை வட்டியுடன் அபராதமின்றி செலுத்துவதற்குமான புதிய சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**இறுதிக்கட்ட பயன்பாட்டிற்கான நீட்டிக்கப்பட்ட கால வரையறை**

- இறக்குமதி செய்யப்படும் இடுபொருள்களின் இறுதிக் கட்டப் பயன்பாட்டுக்கான கால வரையறையை *6* மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை நீட்டிப்பது தொடர்பான விதிமுறைகள் வகுக்கப்படும்.
- இத்தகைய சரக்குகளை இறக்குமதி செய்பவர்கள் மாதந்தோறும் தாக்கல் செய்யும் அறிக்கைகளுக்குப் பதிலாக *3* மாதங்களுக்கு ஒரு முறை அறிக்கை தாக்கல் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

-----

***(Release ID: 2098353)***

***TS/SV/KPG/KR******

***(Release ID: 2098700) Visitor Counter : 6***

***Read this release in: English , Urdu , Marathi , Hindi , Bengali , Assamese , Gujarati , Telugu , Malayalam***